**செய்தி வெளியீடு எண் : 1799** **நாள் : 13.10.2022**

# தமிழ்நாடு சிட்கோவின் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சிட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில் இன்று 13.10.2022 நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாடு சிட்கோ கிளை மேலாளர்களின் பணிகள், தமிழ்நாடு சிட்கோ கட்டுமான பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் இதர திட்ட பணிகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் இவ்வரசின் மூலம் கடந்த ஆண்டு (2021–2022) தமிழ்நாடு சிட்கோ மூலம் செயல்படுத்த வேண்டிய 14 அறிவிப்புகளில் 7 நிறைவேற்றப்பட்ட நிலையில் மீதமுள்ள 7 அறிவிப்புகளை விரைந்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் இவ்வாண்டு (2022–2023)ல் தமிழ்நாடு சிட்கோ மூலம் செயல்படுத்த வேண்டிய 9 அறிவிப்புகளையும் இவ்வாண்டிற்குள் நிறைவேற்றிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு சிட்கோ அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தமிழ்நாடு சிட்கோ தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து தொழில் மனைகளையும் விரைந்து பயன்பாட்டிற்கு கொண்டுவர மற்றும் செயல்பாட்டில் இல்லாத தொழிற்சாலைகளை மீண்டும் செயல்பட தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், சிட்கோ தொழிற்பேட்டைகளை சிறந்த முறையில் பராமரிக்கவும் கிளை மேலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த ஆய்வு கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் திரு.வி.அருண்ராய். இ.ஆ.ப., தமிழ்நாடு சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி. சோ.மதுமதி இ.ஆ.ப. ,பொது மேலாளர் செல்வி ஆர்.பேபி மற்றும் தமிழ்நாடு சிட்கோ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in